செ.வெ.எண்: 40 நாள்: 22.07.2016

# பத்திரிகைச்செய்தி

தமிழகஅரசு உத்தரவின்படி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் அரசுக்கு ஒப்படைப்பு செய்யப்படும் 50% இடங்களுக்கு முதற்கட்ட கட்டகலந்தாய்வு 11.7.16 முதல் 15.7.16 வரை நடைபெற்றது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டை மற்றும் விராலிமலை அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் முதல்கட்ட கலந்தாய்வு நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள 298 இடங்களில் 285 இடங்களும், விராலிமலை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள 131 இடங்களில் 126 இடங்களும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள 402 இடங்களில் 257 இடங்களும், ஆகமொத்தம் 831 இடங்களில் 668 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. நிரப்பப்படாமல் மீதமுள்ள 163 இடங்களுக்கு தொழிற்பயிற்சி வகுப்புகளில் சேர்ந்திட இணையதளம் வாயிலாக ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கு 2-ம் கட்ட மாவட்டகலந்தாய்வு மூலம் மாணவர்கள் சேர்க்கை 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு 25.7.2016 திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கும், 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு 26.7.2016 செவ்வாய்கிழமை காலை 9.00 மணிக்கும் அரசினர் தொழிற் பயிற்சிநிலையம் புதுக்கோட்டையில் மாவட்ட கலந்தாய்வு நடைபெறவுள்ளது.

மேலும், நிரப்பப்படாமல் மீதமுள்ள (8-ம் வகுப்பிற்கு 74-ம், 10-ம் வகுப்பிற்கு 89) இடங்களுக்கும் முதல் கலந்தாய்வுக்குவராதவர்கள், முதல் கலந்தாய்வுக்கு வந்த பின்னரும் தொழிற்பிரிவு (Trade) கிடைக்காதவர்கள், உரிய நேரத்தில் அழைப்புக்கடிதம் கிடைக்காதவர்களும் 2-ம் கட்ட கலந்தாய்வு நடைபெறும் தேதிகளில் கலந்து கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு புதுக்கோட்டை அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் அவர்களை நேரிலோ அல்லது 04322-221584 என்ற தொலைப்பேசி எண் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**